# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032இ
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 1319/2016/ஊராட்சி

ஆணை எண்: 206/2016

நாள்: 26.12.16

ஊராட்சிப் பொதுமக்கள் சார்பாக
திரு. ஆர். சின்னசாமி மற்றும் பலர்,
தென்னிலை மேல்பாகம் ஊராட்சி,
க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம்,
கரூர் மாவட்டம். - முறையீட்டு மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம்,
கரூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

கரூர் மாவட்டம், தென்னிலை மேல்பாகம் ஊராட்சிப் பொது மக்கள் சார்பாக திரு.ஆர். சின்னசாமி முன்னாள் தலைவர் மற்றும் பலர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த 21.12.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில் தென்னிலை மேல்பாகம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள கடைகளை விதிகளின்படி கடந்த 10 ஆண்டுகளாக ஏலம் விடாமல், உள்ளாட்சிப் பொறுப்பில் உள்ளவர்களின் உறவினர்களே கடையை எடுத்து நடத்தி வருவதால், ஊராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்றும், வாரச்சந்தை கூடும் இடத்தில் விறகு மற்றும் கழிவுநீர் குப்பைகளைக் கொட்டி ஆக்கிரமிப்பு செய்கிறார்கள் என்றும் தெரிவித்து மேல் நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்கள்.

## ஆணை

2014 –ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2,(7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் , ''ஊராட்சி மன்றம்'' மற்றும் ''ஊராட்சி ஒன்றியம்'' என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, முறையீட்டுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்முறையீட்டு மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மாவட்டம், கரூர் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவரை அனுகுமாறு தென்னிலை மேல் பாகம் ஊராட்சிப் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

/ஒம்/
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்படுகிறது/

உதவிப்பதிவாளர்

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

நகல்
ஊராட்சிப் பொதுமக்கள்(சார்பாக)
திரு.ஆர். சின்னசாமி,
முன்னாள் ஊராட்சித் தலைவர்,
தென்னிலை மேல்பாகம் ஊராட்சி,
க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.